# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.
## தேதி: 11.09.2024
## OS.No. 124 / 2014
## வழக்கு சாட்சி PW.1 – அமிதன் , த/பெ. ஜான் தேவராஜ்

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா சொத்தின் சர்வே எண் . 1457, 1458/2 ஆகும். சர்வே எண் . 1458/2 ல் கண்ட சொத்திற்கு தான் பட்டா பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வேறு சர்வே எண்ணுக்கு பட்டா மாறிவிட்டதாக நான் கோரவில்லை என்றால் சரிதான் . பட்டாவானது 3ம் பிரதிவாதி ஜெயக்குமார் என்பவரது பெயரில் மாறிவிட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . அவர் பெயரில் மாற்றப்பட்டுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, என்னிடம் உள்ளது. வழக்கில் 1458/3 ல் கண்ட சொத்தில் தான் பட்டா பெயர்மாற்றம் செய்யப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சர்வே எண் சரியாக நினைவில்லை. சர்வே எண் . 1458/3 ல் கண்ட சொத்தானது என்னுடைய அனுபவத்தில் இருந்தற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வாசாஆ 11 வழக்கறிஞர் அறிவிப்பில் சர்வே எண் . 1458/2 ஐ மட்டுந்தான் குறிப்பிட்டு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான் . சர்வே எண் . 1458/3 ல் கண்ட சொத்துடன் சேர்த்து பட்டா மாறியுள்ளதாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . சர்வே எண் . 1459/3 ல் கண்ட சொத்திற்கும் எனக்கும் சம்மந்தமும் இல்லை என்றால் சரிதான். பட்டா மாறுதல் சம்மந்தமாக வருவாய் அதிகாரிகளுக்கு மனு கொடுத்துள்ளேனா என்றால் 3 முறை மாவட்ட ஆட்சியருக்கு மனு கொடுத்துள்ளேன், ஆனால் விசாரணைக்கும்

பிரதிவாதி வரவில்லை. அந்த மனுக்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாசாஆ 4 முதல் வாசாஆ 8 வரையுள்ள ஆவணங்களில் சர்வே எண்கள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் பக்கத்தில் உள்ள சர்வே எண்களை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . வருவாய் துறையில் பதிவேடுகளில் நடக்கப்படும் தவறுகளை குறித்து சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. வருவாய் துறையை அணுகி விட்டு தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலும் என்றால் சரியல்ல. சர்வே எண். 1458/2 தான் எனக்கு பாத்தியப்பட்டது என்றும், சர்வே எண். 1458/3 சொத்தானது எனக்கு பாத்தியப்பட்டது இல்லை என்றும், அதற்கு உண்டான ஆவணம் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

M.SELVAM Digitally signed by M.SELVAM Date: 2024.09.11 15:26:38 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.